Y.M.C.A

# 'பிரேமா' போரையும், அரசியலையும் சிக்கலாக்கினர்

## - ஜே. ஆர். பேட்டி

(கொழும்பு)
இந்திய அமைதிப்படையை இந்தியாவுக்கு திருப்பி அனுப்புவதற்கு திரு. பிரேமதாஸா எடுத்தமுடிவு ஒரு அரசியல் முடிவு எனவும் இதன் மூலம் அவர் போரையும் அரசியலையும் ஒன்றுக்கி அதனை சிக்கலாக்கிவிட்டார் என்றும் முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரி
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 85 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 23 இதழ் 110
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 05 — 06 — 1993

## ஹேமா தலைமையில் புதியகட்சி ஆரம்பம்

(கொழும்பு)
கடந்த மே முதலாம் திகதி படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாஸா தலைமையில் புதிய அரசியல் கட்சி ஒன்று இலங்கை ஆரம்பித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

"சுசரித்த பிரஜைகள் முன்னணி" என்ற பெயரில் இந்தக் கட்சி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக ரஷ்ய பத்திரிகையில் அறிவிக்கப்பட்டுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது. (இ-சி)

★ வருட இறுதிக்குள்

# அரசியலமைப்பில் திருத்தம்

# தொடர்ந்து பொதுத் தேர்தல்!

(கொழும்பு)
வருட இறுதிக்குள் அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் பட்டு வருவதுடன். இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத்தேர்தல் நடத்த அரசு திட்டமிட்டுள்ளதாகவும் புதிய திருத்தத்தின்படி நாடாளுமன்றத்துக்குக் கூடிய அதிகாரம் வழங்கப்படுமெனவும் கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குமுன் அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டுவந்து அதை நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. நாடாளுமன்றத்துக்கு கூடிய அதிகாரங்களை கொண்டுவரும் விதத்தில் அரசியல் அமைப்பில் திருத்தம்கொண்டு
(4-ம் பக்கம் பார்க்க)

## ★ 91/92 கல்வியாண்டு
## பொறியியல் பீட புதிய வெட்டுப் புள்ளி

(கொழும்பு)
1991/92 கல்வியாண்டுக்கான பொறியியல் பீட புதிய வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டு அதற்கு தெரிவான மாணவர்களுக்கு கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளது.

காரைநகர் மாணவர் ஒருவர் தொடுத்த வழக்கின் அடிப்படையில் வெளியான நீதிமன்றத்தீர்ப்பை அடுத்தே இந்த
(4ம் பக்கம் பார்க்க)

## "ஜனாதிபதி ஆட்சிமுறை நீங்குவதை எதிர்க்கிறேன்"
### — தொண்டா பேட்டி

(கொழும்பு)
நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்குவது குறித்து எனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமிய கைத்தொழில் துறை அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான திரு எஸ் தொண்டமான் லங்காதீப சிங்கள பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதா
(4-ம் பக்கம் பார்க்க)

## 'பிரேமா' கொலை விவகாரம்:
## தமிழக காவல்துறையின் உதவி நாடப்படுகிறது

(சென்னை)
முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் கொலை தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு தமிழக காவல்துறையின் உதவியை இலங்கைப் பொலிஸார் நாடியுள்ளனர்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலையும் பிரேமதாஸாவின் கொலையும் ஒரே பாணியில் நடத்தப்
(4-ம பக்கம் பார்க்க)

## விஜயதுங்காவிற்கு எதிராக குற்றச்சாட்டுப் பிரேரணை

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஹேமா பிரேமதாசா பிரிவு என்றும் ஜே. ஆர். பிரிவு என்றும் இரு பிரிவுகள் ஏற்பட்டுள்ளன.

இந்த இரண்டு பிரிவுகளும் இப்போது சந்தடியற்ற போராட்டம் ஒன்றை நடாத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவுக்கு எதிராக அரசியல் குற்றச்சாட்டு பிரேரணை ஒன்றைக் கொண்டுவரும் அளவுக்கு இந்தப் போராட்டம் வளர்ச்சியடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவிப்போர், எதிர்ப்
(4-ம் பக்கம் பார்க்க)

## பெருமாளை சந்திக்க சுரேஷ் இந்தியா பயணம்

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு இந்திய அரசின் ஆலோசனையுடன் தீர்வுத்திட்டம் ஒன்றை எடுத்துவர ஈ. பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் விரைவில் இந்தியா செல்லவுள்ளார்.

அங்கு இவர் திரு. வரதராஜப்பெருமாளைச் சந்தித்து உத்தேச தீர்வுத் திட்டம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார். (இ)

## தேர்தல் ஆணையாளர் ஓய்வு பெற முடிவு

(கொழும்பு)
தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா இவ் வருட இறுதியில் தமது பதவியிலிருந்து ஓய்வு பெறப்போவதாக தெரிவித்துள்ளார்.

தற்போது 57 வயதைப் பூர்த்தி செய்திருக்கும் திரு சில்வா இன்னும் மூன்று வருடங்கள் அரசசேவையில் பணியாற்ற முடியும்

எனினும் கடந்த காலங்களில் நான்கு முக்கிய தேர்தல்களைப் பொறுப்பேற்று நடத்தியிருப்பதாலும் அதனால் ஏற்பட்டிருக்கும் மன உளைச்சல் காரணமாகவுமே ஓய்வுபெற முடிவெடுத்திருப்பதாக அவர் தமக்கு நெருக்கமானவர்களுக்கு தெரிவித்துள்ளார். (இ-சி)

## காமினி - பிரேமச்சந்திரா ஐ. தே. கவில் சேருவர்?

(கொழும்பு)
ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கிய தலைவரான திரு. காமினி திஸநாயக்க, முன்னணியின் செயலாளர் திரு ஜி எம் பிரேமச்சந்திரா ஆகிய இருவரும் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வார்கள் என தெரியவருகிறது.

இவர்கள் இருவரையும் மீண்டும் ஐக்கியதேசியக் கட்சியில் சேர்த்துக் கொள்வதற்கு கட்சியின் உயர்வட்டாரங்கள் இணக்கம் தெரிவித்திருப்பதை அடுத்தே இவர்கள் இருவரும் மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியில் சேர்ந்து கொள்ளவிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு
4ம் பக்கம் பார்க்க

## அவசரகாலச் சட்டத்தை
## வட, கிழக்கில் தொடரவும் தெற்கில் நீக்கவும் ஆலோசனை

(கொழும்பு)
வட—கிழக்கு மாகாணத்தில் அவசரகாலச் சட்டத்தை தொடரவும், பிற பகுதிகளில் அவசரகாலச்சட்டத்தை நீக்கவும் இலங்கை அரசு ஆலோசித்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

அவசரகாலச் சட்டத்தில் உள்ள அளப்பெரிய அதிகாரத்தை அரசு தவறாக பயன்படுத்தி தம்மையும் ஆதரவாளர்களையும் ஒடுக்குகிறது என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவதை யொட்டியே வட கிழக்கு மாகாணத்தைத் தவிர மற்ற பகுதிகளில் அவசரகால
4-ம் பக்கம் பார்க்க

## வரிவிளம்பரம்

### அறிவுக் களஞ்சியம்

பொது அறிவை வளர்க்கும் பல்துறை சார்ந்த சிறுசிறு கட்டுரைகளோடு அறிவுக் களஞ்சியம் - 12 வெளிவந்து விட்டது. பயனுள்ளது. விலை ரூபா பத்து மட்டுமே. (எ-3177)

### தவறிவிட்டது

கட்டைப்பிராயக்கும் 3ம் கட்டைக்குமிடையில் கைச் செயின் ஒன்று 3-6-93ம் திகதி காலை தவறிவிட்டது. கண்டெடுப்பவர் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். சுரேஷ், 141, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குழி. (சி-184)

### புலமைப் பரிசில் பரீட்சை (Paper Class)

ஆண்டு 5 புலமைப் பரிசில் Paper Class சனி, ஞாயிறு நாட்களில் பி. ப. 4-00—6-00 வரை நடைபெறும் ஆரம்பம் 05-06-93 சனி. குறிப்பிட்ட தொகை மாணவர் அனுமதிக்கப்படுவர். தொடர்பு: புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இ-185)

### சென். ஜோன்ஸ் கல்லூரி
## புதிய அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் புதிய அதிபராக இலசப்பு தனபாலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு தலைமைப் பீடத்தினால் திரு. எஸ். தனபாலன் அதிபராக உறுதிப்படுத்தப்பட்ட பத்திரத்தை மேற்படி கல்லூரியின் முகாமையாளர் வைத்திய கலாநிதி ஜெயகுலராசா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற சிறு வைபவமொன்றில் வைத்து வழங்கினார். (வி)

## இராசி பலன்

05-06-1993
சனிக்கிழமை

(தமிழுக்கு வைகாசி 23)

பிரதமை மாலை 6-18வரை. கேட்டை பி. ப 12-50 வரை சித்தயோகம், இராகுகாலம் காலை 8-52 முதல் 10-22 வரை, சுபநேரம் பகல் 2 52 முதல் 4-22 வரை.

மேடம்: அச்ச உணர்வு, தொழில் இடைஞ்சல் வயிற்றுக் கோளாறு.

இடபம்: நல்லோர் பகை, குடும்ப பிரிவு, மனசங்கடம்.

மிதுனம்: மதிப்பு, மரியாதை, பிறர் உதவி, காரிய சித்தி.

கடகம்: தொழில் முயற்சி, கடன் தீருதல், வாக்கு வன்மை.

சிம்மம்: மனக் கொதிப்பு, தனியான வாசம், அலைச்சல்.

கன்னி: வீண்வம்பு, தொழில் நஷ்டம் உறவினர் தொல்லை.

துலாம்: காரிய வெற்றி, பெண் நன்மை, விருந்துபசாரம்.

விருச்சிகம்: உடல் சோர்வு, வீண் செலவு, புத்திரர் கவலை.

தனுசு: சயனசுகம், புதுப் பொருள் சேர்க்கை, நிம்மதி.

மகரம்: தொழில் விவகாரம், கடமை தவறுதல், அவமானம்.

கும்பம்: உறவினர் வருகை, சமாதான பேச்சு, காரிய பலிதம்.

மீனம்: பெரியோர் மதிப்பு, பயண அனுகூலம், பாராட்டு.

— ஜோதிடர்

## சுதந்திரப் பறவைகள்
### இன்று வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

'சுதந்திரப் பறவைகள்' ஆனி மாத இதழ் இன்று வெளிவருகின்றது. ஆயிரம் விதவைகளின் அவலம், தென் தமிழீழத்தில் கொடுமை என்ற தலைப்புச் செய்தியோடு வெளிவரும் இந்த இதழில் சுமை தாங்கும் வலுவான கரங்கள், வானம் வெளுக்கிறது சிறுகதை, குடும்பச்சூழலில் பெண்கள் எதிர்நோக்கும் ஒடுக்குமுறைகள், விலக் கேற்றும் பெருமாட்டிகள் இருளில் வாடுகிறார்கள் என்ற அம்சங்களோடு நூல் அறிமுகம், கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. (சு)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

சித்தமருத்துவப் பிரிவிற்கு 1992/93ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவப் பிரிவிற்கு பி. எஸ் எம். எஸ். பட்டமாணிப் படிப்பிற்காக மாணவர் களைச் சேர்ப்பதற்கு பின்வரும் தகைமைகள்உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

(அ) 1989, 1990, 1991 ஆகஸ்ட் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஆ) 1993 ஆம் ஆண்டு யூன் 3 ஆம் திகதியன்று 17 வயதிற்கு குறையாதவராக இருக்க வேண்டும்.

30-06-1993ல் மேற்குறிப்பிட்ட கல்வித் தகைமைகள் யாவுமுடையவராக இருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்டவைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதி பற்றிய விபரங்களும், விண்ணப்பப் பத்திரமும யாழ். பல்கலைக்கழகத்தில் சிறுப்பன் கருமபீடத்தில் ரூபா 20/- செலுத்தி அல்லது நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு ரூபா 20/-க்கான காசுக்கட்டளை ஒன்றினைப் பெற்று அத்துடன் உங்கள் முகவரியிடப்பட்டு, முத்திரை ஒட்டிய உறை ஒன்றினை அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய கடைசித் திகதி 30-06-1993.

பதிவாளர்.

(எ-3274)


## வள்ளுவர் விழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் திருவள்ளுவர் மன்றம் நடாத்தும் வள்ளுவர் விழா யூன் 11, 12, 13ம் திகதிகளில் உரும்பராய் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

1ம் நாள் மாலை ஊர்வலம், உரையரங்கு, கலை நிகழ்ச்சிகளும், 2ம் நாள் திருக்குறள் ஆய்வரங்கும், உரையரங்கு, கவியரங்கு, கலைநிகழ்ச்சிகளும் 3ம் நாள் திருக்குறள் ஆய்வரங்கும், உரையரங்கு, பரிசளிப்பு, பட்டிமண்டபம், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

பொதுப் பட்டமளிப்பு

1993-09-11

டிப்ளோமாக்கள் / பட்டங்கள் / பட்டப்பின்டிப்ளோமாக்கள் / முதுமாணி கலாநிதி ஆகிய பட்டங்களை அளிப்பதற்கான 1993 - 09 - 11 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப்பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தோர் 93 - 07 - 15க்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

1. கலாநிதித் தேர்வு.
2. முது தத்துவமாணித் தேர்வு
3. முது கலைமாணித் தேர்வு
4. முது விஞ்ஞான மாணித் தேர்வு
5. கல்விப் பட்டப் பின் தகைமைச்சான்றிதழ் தேர்வு 1991
6. வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணி தேர்வு 1991
7. வணிகமாணித் தேர்வு 1991
8. தொழில் நிர்வாகமாணித் தேர்வு 1991
9. சிறப்பு விஞ்ஞானமாணித் தேர்வு 1991
10. சிறப்புக் கலைமாணித் தேர்வு 1991
11. பொது விஞ்ஞானமாணித் தேர்வு 1991
12. பொதுக் கலைமாணித் தேர்வு 1991
13. இசை/நாட்டியக் கலைமணித் தேர்வு 1991
14. சித்த வைத்தியமாணி சத்திர சிகிச்சைமாணித் தேர்வு

வேண்டுகோள்களைமேற் குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். வேண்டுகோள் படிவங்களையும், மற்றும் விபரங்களையும், முத்திரை ஒட்டிய 23X10 செ.மீ அளவுடைய சுயமுகவரியிட்டகடித உறையை உபபதிவாளர்/தேர்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலைநேரங்களில்தேர்வுக் கிளைக்கு நேரடியாக வந்தோ பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்குக் கிடைக்கப்பெறாத வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

(ஏ-3178)


## வதிவிட வேளாண்மை போட்டி
# இன்று பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட 1993ம் ஆண்டுக்கான வதிவிட வேளாண்மைப் போட்டியில் மாவட்ட மட்டத்திலும், தென்மராட்சி கோட்ட மட்டங்களிலும் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று 5ம் திகதி மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாசாலையில் இரவு 7-45 மணியளவில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக இணைப்பாளர் ந. அருள் நேசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ் மாவட்டத்தலைவர் அம்புமகள் விளக்கேற்றி வைக்கவுள்ளார்.

வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், மாவீரர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் செல்வி தமிழவன் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம், தென்மராட்சி தலைவர் பரணி ஆகியோர் வழங்கி கௌரவிக்கவுள்ளனர்.

நிகழ்வில் இறுதியாக விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (கி)

## கண்காட்சி
### இன்று 2ம் நாள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினரால் நடாத்தப்படும் ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படம், சித்த மருத்துவ கண்காட்சியின் இரண்டாவது நாளாகிய இன்று வைத்திய கலாநிதி பொ. சு. இராசரத்தினம் தலைமை வகிக்கின்றார்.

"சித்த மருத்துவம்" என்ற விடயத்தில் வைத்தியர் கு. சங்கரப்பிள்ளை, வைத்தியகலாநிதி பொ. சண்முகரட்ணம், வைத்தியகலாநிதி பொ. இராமநாதன், வைத்தியகலாநிதிகள் அ. வி. இராசரத்தினம், இ. கனலிங்கம், எஸ்.

4-ம்பக்கம் பார்க்க.




கோண்டாவில் தில்லையம்பதியில்

இன்று

பூங்காவனத்திருவிழா

பரந்தெழுந்த சமண் முதலாம்
பரசமய விருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித்
திருநீற்றி னொளி விளங்க
அரந்தை கெடப் புகலியர்
கோனமுது செயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரி
பூங்கழல் போற்றி

(சி-143)

முக்கிய அறிவித்தல்

நம்பிக்கை, நாணயம், தரத்தால் உயர்ந்த

புனிதா நகை மாளிகை

(நேற்று) 4-6-93 முதல்
இல. 239 கஸ்தூரியார் வீதியில்
அமைந்துள்ள கட்டடத்துக்கு மாற்றம் செய்துள்ளோம்.
அறிந்தவர்கள் அறியாதவர்களுக்கு
தெரியப்படுத்தவும்.

உரிமையாளர்.

(இ-177)

உ

யாழ். தென்மராட்சி
சாவகச்சேரி நகர் புராதன வாரிவனேஸ்வரம்
அருள்தரு - அமிர்தபாஷினி அம்பிகா சமேத

வாரிவன நாதசுவாமி
மகா கும்பாபிஷேகம்

9-6-93 புதன் முற்பகல் 10-40—11-50
வரையுள்ள சுபமுகூர்த்தம்

6-6-93 காலை 8-30 மணி நவக்கிரகசாந்தி
(கிரகதோஷம் உள்ளவர்களும் ஏனைய அடியவர்களும்
கிரக வழிபாட்டில் கலந்து கொள்ளலாம்)

6-6-93 ஞாயிறு மாலை தீபபூஜை திருவிளக்கு பூஜை
(சுமங்கலிப் பெண்களும் - கன்னிப்பெண்களும்
திருவிளக்கு - பூஜை வழிபாட்டில் கலந்து கொள்ளவும்)

இராமநாதன் கருணாகரன்
(தர்மகர்த்தா)

(இ-179)

★ இன்று உலக சூழல் தினம்

# சுற்றுச் சூழலை பாதுகாப்பதில்

## மரங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன

சுற்றுச் சூழலை நிலை பெறுத்துவதில் மரங்களும், அவற்றின் ஒவ்வொரு பகுதியும் எவ்வாறு உதவுகின்றன என்பதை நாம் இன்று சிந்திப்பது பொருத்தமாகுமென நாம் நம்புகிறோம். ஈழத்தமிழகத்தில் கோடை காலத்தில் பெரும் பகுதி வரட்சிக்கு உள்ளாகிறது. புல், பூண்டு, செடி மரங்கள் இன்றிக் கட்டாந்தரையாக உள்ள நிலப்பரப்பும் ஏராளமாக இங்குண்டு. இதனால் இவை கோடை காலத்தில் வெப்பத்தில் அனல் கேந்திரங்களாக மாறிவிடுகின்றன. வெயிலில் இந்நிலப்பரப்பும் மிகு வெப்பமடைந்து அந்த மிகுவெப்பத்தைக் காற்றுக்கு ஊட்டுகிறது. அனல் காற்று அருகிலுள்ள பயிர்களை எல்லாம் தீய்த்து விடுகின்றன. பயிருக்கு இறைத்த நீர் எல்லாம் வெகு விரைவில் உறிஞ்சப்பட்டு விளைச்சலும் குன்றிவிடுகிறது. மரங்கள் வளர் திறனை இழக்கின்றன. பயனும் நலிகிறது இன்று இது கண்கூடு.

இதற்கான காரணமென்ன? கட்டாந்தரை நிலங்களில் விழும் மழை நீரை இத்தரை நிலத்தின் கீழ் உட்புகவிடுவதில்லை. மாறாக மழை நீரை அதன் போக்கில் விரட்டென்று ஓடிவிடச் செய்கின்றன. வெள்ளம் மண்ணையும் அரித்தெடுத்து அள்ளிச் செல்கிறது. நிலத்தடி நீரோட்டத்திற்கு நீர் சேர்வதில்லை. நீர் வரத்து இல்லாத காரணத்தினால் அயலிலுள்ள கிணறுகளில் ஆண்டு தோறும் நீர் மட்டம் தாழ்ந்து கொண்டே போகிறது ஏனைய நீர் நிலைகளில் துரிதமாக நீர் ஆவியாக மாறிப் பயனற்றுப் போகிறது.

இக்கட்டாந்தரை நிலங்களில் வறட்சியைத் தாங்கக் கூடிய மரங்களை நட்டு வளர்ப்பதால் அவற்றின் வேர்கள் மண்ணைப் பற்றிக்கொண்டு மண்ணரிப்பைத் தடுத்துவிடுகின்றன. அத்தோடு மழை நீரையும் மரங்களின் வேர்கள் தரைக்குள் இழுத்துக்கொள்கின்றன. வேர்கள் வளர்ச்சியடையும் பொழுது இறுக்கமான கடின மண்ணைப்பிளந்து காற்றோட்டத்திற்கு வகை செய்வதுடன் மழை நீர் கீழ் செல்லவும் வழி செய்கிறது. உதிரும் இலைகளில் மேல் மட்ட மண்ணரிப்பு தடுக்கப்படுகிறது போல வரவேர்கள் மண்ணைக் கெட்டியாகப்பற்றிக்கொள்வதினும் காற்றினால் ஏற்படும் மண்ணரிப்பும் ஏற்படுவதில்லை. மரத்தின் இலைகளிலிருந்து வெளியாகும் நீராவி காற்றை குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகிறது. காற்றில் அள்ளப்பட்டு வரும் தூசு துகள்களை மரத்தின் இலைகள் தடுத்து வைக்கின்றன. இவை மழையில் போது கழுவப்பட்டு தரையைச் சேர்கின்றன.

மரங்களைச் சூழ உதிரும் சருகுகளும் பட்ட சுள்ளிகளும் ஈரலிப்பை உண்டாக்கிக் கூட்டுப் பசளையாக்கிச் சூழ வளரும் செடி கொடிகளின் வளர்ச்சிக்கு ஊட்டமளிக்கின்றன மண்ணின் பசளைத் தன்மைக்கும் வளத்திற்கும் வேர்கள் வெகுவாக உதவுகின்றன. ஆழச்செல்லும் வேர்கள் சிறிய மரங்களால் எட்ட முடியாத ஆழ் பரப்பிலிருந்து ஊட்டத்தையும், நீரையும் மேலே கொணர்கின்றன. முதிர்ச்சியடைந்த வேர்கள் உக்கும்பொழுது மண்ணின் வளத்திற்கு உதவுகின்றன மரங்கள் சில ஊட்டத்தைக் காற்றிலிருந்து பெற்று அதனைக் கீழே மண்ணுக்குச் சேர்ப்பிக்கின்றன.

கலாநிதி க. கனகராசா

மரங்களின் தழையும், பூவும், காயும், கனியும் பட்டையும் வேரும் கிழங்கும் பிணி போக்கும் மருந்தாகவும், பசி போக்கும் உணவாகவும் உதவுவதுடன் சுகவாழ்வுக்கான ஊட்டச் சத்தையும் உதவுகின்றன. கட்டுமான வேலைக்கு உறுதியாக தீராந்திகளையும், வளைகளையும் தருவதுடன் தொழிலும், கட்டிலும் ஏனைய தளபாடங்கள் செய்வதற்கும் உதவுகின்றன. வேலை ஏற்படுத்திக்கொடுக்கிறது. கயிறு, கடதாசி, தேயிலை, கோப்பி, றப்பர், துணி, பூச்சிகொல்லிகள் படைகலங்களும் பெற்றுக் கொள்ள மரங்களே உதவுகின்றன. அடுப்பங்கரையிலும் சுண்ணாம்பு செங்கற் சூளைகளிலும் அவசியமான விறகை மரங்கள் தருகின்றன. நீர் நிலைகளைச் சூழ மரங்களை நட்டு வைப்பதால் அவற்றின் நிழலினால் கீழேயுள்ள தரை குளிர்ச்சியடைவதால் இந்நீர் நிலைகளிலுள்ள நீர் ஆவியாக மாறிவிரயமாவது வெகுவாக கட்டுப்படுத்தப்படுகிறது.

கோடையில் இளைப்பாற மட்டுமன்றி குளிர் தருக்கள் கீழே அமர்ந்து கல்வி பயிலவும் உண்டு உறங்கவும் உதவுவதை எம்மைச் சூழக் காண்கிறோம். சுற்றுச் சூழலுக்கு மேற்கண்டவாறு பலவாற்றானும் உதவிடும் மரங்கள் பல்துறைப்பட்ட தொழில் வாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்றன.

வனமகோற்சவத்தை வருடாவருடம் நடத்தினைத்துச் சீரியதொரு கலாசாரத்தைப் பின்னணியாகக் கொண்ட நாம் இன்று காடுகளை அழித்து மரங்களைத் தறித்து பருவநிலைகளைத் தடுமாற வைத்துவிட்டோம்.

நினைவு தினங்களில் மரம் நடுவது என்பதை விரதமாகவும், தறிக்கப்படும் ஒவ்வொரு மரத்திற்குப் பதிலாக மற்றுமொரு மரத்தை நடுவோம்-பராமரிப்போம் என்பதைச் சபதமாகவும் ஏற்று நாம் ஒவ்வொருத்தரும் செயற்படுவது அவசியம். முனைப்புடன் செயற்படுவோம்.

# 'ஹஜ்' தொழுகையில் 140 பேர் மரணம்

ஜகார்த்தா!

சவூதி அரேபியாவில் ஹஜ் தொழுகையை நடத்திக் கொண்டிருக்கையில் 140க்கும் மேற்பட்ட இந்தோனேஷிய யாத்திரீகர்கள் இறந்துபோய் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான இறப்பிற்கு இதய நோய்கள், முதுமை மற்றும் வெப்பத்தின் கடுமை ஆகியனவும் இதற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டது

இந்த ஆண்டில் இந்தோனேசியாவிலிருந்து ஒரு லட்சத்து 22 ஆயிரம் இந்தோனேஷியர் ஹஜ் யாத்திரையை மேற்கொண்டனர்.

சென்ற ஆண்டு 370 பேர் இறந்ததும் குறிப்பிடத்தக்கது. (கே-சி)

# புலிகளை சாட்டாக்கி

## மத்திய அரசு பழிவாங்குகிறது

(சென்னை)

தமிழகத்தில் எதிர்க்கட்சிகளை பழிவாங்க மத்திய அரசு விடுதலைப்புலிகள் பிரச்சினையை சாட்டாகப்பயன்படுத்துகிறது என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் எம். ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று சேலத்தில் நடைபெற்ற கட்சியின் மாநில நிர்வாகக் குழுக் கூட்டத்துக்கு பின்பு பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காவிரிநதி நீர் பிரச்சினையில் நடுவர் மன்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பை கர்நாடக அரசும் மத்திய அரசும் அமுல்படுத்தவில்லையென்றும் இதற்கு எதிராக தமது கட்சி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர இருக்கின்றது என்றும் குறிப்பிட்டார். (சு)

# உலக சூழல் தினம்:

## இன்று பல்வேறு நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

உலக சூழல் தினம் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் கொண்டாடப்படவுள்ளன.

யாழ். பரி. யோவான் கல்லூரியில் இன்று காலை 9-00 மணிக்கு சுற்றாடல் தினம் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து சூழல் நிகழ்ச்சியைச் சித்தரிக்கும் அலங்கார ஊர்திப்பவனி, அலங்கார உடை, சித்திரக் கண்காட்சி, மரம் நாட்டு விழா என்பன இடம்பெறும்.

இவ்விழாவுக்கு சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சிவதர்ம வள்ளல் க. கனகராஜா, யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ பாலசிங்கம், யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் வி கே. கணேசலிங்கம், வண. பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்வார்கள்.

யாழ். பல்கலைக் கழகத்திலும் இன்று பல நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. கைலாசபதி கலையரங்கில் இன்று மாலை 3 மணிக்கு புவியியல் துறைத் தலைவர் செ. பாலச்சந்திரன் தலைமையில் விழா ஆரம்பமாகும். இதில் பேராசிரியர் பொ பாலசுந்தரம்பிள்ளை, கலாநிதி பா. சிவகடாட்சம், பேராசிரியர் என். பாலகிருஷ்ணன், வைத்திய கலாநிதி செ. சு நச்சினார்க்கினியன் ஆகியோர் பேச்சாளர்களாக கலந்து கொள்கிறார்கள்.

யாழ். செயலகத்தில் உலக சுற்றாடல் பாதுகாப்பு தினத்தையொட்டி இன்று காலை 8-30 மணிக்கு செயலக வளவு சிரமதான அடிப்படையில் துப்புரவாக்குதல், நாற்றுமேடை அமைத்தல் போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன யாழ். அரச அதிபர் க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் செயலகத்திலுள்ள சகல கிளைத் தலைவர்களும், ஊழியர்களும் கலந்து கொள்வார்கள்.

யாழ். மாவட்ட சமூகநல சேவை திணைக்களத்தினர் உலக சுற்றாடல் தினவிழாவை இன்று சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு சமூகநல சேவை திணைக்களம் நல்லூரில் கொண்டாடுகின்றனர்

இதனையொட்டி திணைக்கள வளவினுள் தென்னை நாற்று மேடை அமைத்தல், தென்னங்கன்றுகள் விநியோகித்தல் தென்னைச் செய்கையும் பராமரிப்புகள் பற்றியும் விளக்கமளித்தல் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினராக மாவட்ட ஆணையாளரும் அரசாங்க அதிபருமான திரு க. மாணிக்கவாசகர் கலந்து கொள்கின்றார். (61-கே)

## இன்று

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் அண்ணா கலை மன்றம் பண்டிதர் பரமகுரு இராசகுருவின் அகவை ஐம்பதை பூர்த்தி செய்தமையை முன்னிட்டு நடாத்தும் பொன் விழா இன்று சனிக்கிழமை மாலை 2-30 மணியளவில் பண்ணாகம் ஸ்ரீமுருகன் அன்னதான சபை மண்டபத்தில் செல்வன் தி. கணேசலிங்கம் தலைமையில் இடம் பெறுகின்றது இவ்விழாவின்போது இவர் தங்க பதக்கமும் பொன்னாடையும் போர்த்தி கௌரவிக்கப்படவுள்ளார்.

பல அறிஞர்கள் பாராட்டுரை நிகழ்த்துவர். (க-சி)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக புறநிலைப்படிப்புகள் அலகு வழங்கி வரும் 'சுகவாழ்வு' பொது விரிவுரைத் தொடரின் 10வது அமர்வு இன்று சனிக்கிழமை காலை 9 முதல் 12 மணிவரை கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

பதில் துணைவேந்தர், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் எஸ் மகேஸ்வரன் தலைமையின்கீழ் இடம்பெறவுள்ள 10வது அமர்விலே 'சருமத்தைப் பாதுகாத்தல்' எனும் தலைப்பில் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி (திருமதி) சே. குகதாஸனும், 'உடற்பயிற்சியும் சுகவாழ்வும்' எனும் தலைப்பில் உடற்றொழிலியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி க சிவபாலனும் விரிவுரைகளை வழங்கவுள்ளார்கள். (சி)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஆதரவில் இடம்பெற்றுவரும் புகைப்படக்கலை அடிப்படைப் பயிற்சி நெறியின் தொகுதி 4 இற்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் தொகுதி 95 இன் ஆரம்பவிழாவும் இன்று சனிக்கிழமை மாலை 2 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (சி)

0 0 0

(4-ம் பக்கம் பார்க்க)

# 'ஜெ' அரசின் ஊழல் குறித்து

## புகார் பட்டியல் சமர்ப்பிக்கப்படும்

(சென்னை)

அனைத்திந்திய அண்ணா தி. மு. க அரசின் ஊழல் புகார் பட்டியலை மாநில ஆளுநரிடம் தமிழ்நாடு காங்கிரஸ்கட்சி இன்னும் இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கவுள்ளது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் தண்டாயுதபாணி தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாட்டுக் கிளை அண்ணா தி. மு. க. அரசு, ஜனநாயக மரபுகளுக்கு எதிராகச் செயல்படுகின்றது என்று குற்றம் சாட்டியுள்ளதோடு அரசியல் சட்டத்தின் 356வது சரத்தை பயன்படுத்தி அ. தி. மு. க. அரசை கலைக்க மத்திய அரசு முயற்சி செய்வதையும் கண்டிப்பதாக சென்னையில் நடைபெற்ற இந்தச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. (சு-சி)

# 5 மாதத்தில் 844 பேர்

## நாய்களினால் கடியுண்டனர்

(யாழ்ப்பாணம்)

இவ்வருடத்தில் கடந்த ஐந்து மாத காலப்பகுதிகளில் 844 பேர் கட்டாக்காலி, வீட்டு நாய்களினால் கடியுண்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் 187 பேர் விசர் நாய்க்கடிக்குள்ளாகியவர்களாவர். 844 பேரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவர்களாவர். கடந்த மேமாத காலப்பகுதியில் நாய்க்கடிக்குள்ளாகியவர்கள் அதிகமானோர் என பதிவேட்டிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது

ஜனவரியில் 36 பேரும், பெப்ரவரியில் 25 பேரும் மார்ச் மாதத்தில் 43 பேரும் ஏப்ரல் மாதத்தில் 34 பேரும் மே மாதத்தில் 49 பேருமே விசர் நாய்க்கடிக்குள்ளாகியிருக்கின்றனர்

ஏனைய மாதங்களைவிட 250 பேர் மே மாதத்தில் மட்டும் நாய்க்கடிக்குள்ளாகியிருக்கின்றனர்.

மற்றும் சாவகச்சேரி, தெல்லிப்பளை, சங்கானை, அச்சுவேலி, பருத்தித்துறை, பளை, வரணி, வல்வெட்டித்துறை, புத்தூர், பொ ப்பாய், வைத்தியசாலைகளில் கடந்த இரு மாத காலத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் நாய்க்கடிக்குள்ளாகி சிகிச்சை பெற்றிருப்பதாக வைத்தியசாலைகள்-சுகாதாரப்பகுதிவட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (56-ரி)

# மின்னல் தாக்கி இருவர் மரணம்

(சென்னை)

தமிழகத்தில் நெல்லை ஆர்க்காடு மாவட்டத்தில் இரண்டு பேர் மின்னல் தாக்கி மரணமடைந்துள்ளார்கள்

இதேவேளையில் திருச்சியில் 80 கிலோ மீற்றர் வேகத்தில் சூறாவளி வீசியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக தமிழ் நாட்டில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதாகச் செய்திகள் கூறுகின்றது. (சு)

## மரணம்

(பண்டத்தரிப்பு)

கிளிநொச்சி புனித திரேசம்மாள் தேவாலயத்தில் கொழும்பிலிருந்து வந்து இறைவழிபாட்டுச் சேவையை எதிர்பார்த்து தங்கியிருந்த அரியாலையைச் சேர்ந்த நல்லையா மனிஸ்ரரின் (42 வயது) என்பவர் திடீரென நோய்வாய்ப்பட்டு கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். (72)

# புலிகள் - அரசு பேச்சிற்கு உதவி செய்யத் தயார்!

## தமிழ் மூத்தோர் பேரவை அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளும் இலங்கை அரசும் விரைவான அமைதிப் பேச்சுவார்த்தை நடாத்த இரு தரப்பினருக்கும் உதவ தமிழ் மூத்தோர் பேரவை தயாராகவிருப்பதாக இப்பேரவையின் தலைவர், ஜனாதிபதி டி. பி விஜயதுங்காவிற்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: பொத்துவிலிலிருந்து பருத்தித்துறை வரையுள்ள பகுதி தமிழ் பிரதேசமென அங்கீகரிக்கப்படவேண்டும் என தமிழர்கள் கோருகிறார்கள். அதற்கான அதிகாரப் பரவலாக்கலையும் அவர்கள் கோருகின்றார்கள். இந்த இரு விடயங்களும் அரசாங்கத்தால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

இனப்பிரச்னை உடனடியாக தீர்க்கப்படவேண்டும் என்பது அனைவரதும் கோரிக்கையாகும். இந்த விடயத்தை அறிந்துள்ள நீங்களும் புலிகளின் தலைவர் உங்களைச் சந்திக்க வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளீர்கள். இவ்விடயத்தில் உங்களுக்கு உதவ தயாராக இருக்கிறோம். என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## உணவு விநியோக ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட உணவு விநியோகம் தொடர்பாக ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று எதிர்வரும் 7ம் திகதி காலை 10 மணிக்கு யாழ். அரசாங்க செயலக மண்டபத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு சகல உதவி அரசாங்க அதிபர்களையும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோரைத் தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (நி)

## ஆய்வு பட்டறை

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் நடாத்தப்படும் வலுக்குறைவானோர் புனர்வாழ்வுக்கான வழிமுறைகளை இனம் காண்பதற்கான ஆய்வுப்பட்டறை கொக்குவில் தமிழர் புனர்வாழ்வுக்கழக கலந்துரையாடல் மண்டபத்தில் இன்று 5ம் திகதியும் நாளை 6ம் திகதியும் காலை 9 மணிமுதல் மாலை 4.30 மணிவரை நடைபெறும்.

இன்று 5ம் திகதி ஆரம்பமாகும் நிகழ்ச்சி இணையத் தலைவர் வ. க. லோலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

## தமிழகத்தில் 3000 பேர் கைது

(சென்னை)

தமிழ்நாட்டில் இன்று நடைபெறவிருக்கும் போக்குவரத்து யூனியன்களின் வேலைநிறுத்தம் தொடர்பாக மூவாயிரத்துக்கும் அதிகமானோர் முன்னெச்சரிக்கையாக நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

மேற்படி வேலைநிறுத்தத்தில் இன்று கலந்து கொள்ளும் தொழிலாளர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று அரசு எச்சரிக்கை செய்துள்ளது. (வி-நி)

## "படைப்பாளிகள் அடுத்த சந்ததிக்கு போராட்ட உணர்வுகளை ஒப்படைக்க வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"படைப்பாளிகள் நிகழ்ந்து கொண்டிருக்கும் போராட்ட உணர்வுகளை அடுத்த சந்ததிக்கு ஒப்படைப்பதற்காக தமது ஆக்கங்களை படைக்க வேண்டும்" என்று தமிழீழ விடுதலைப்புலிகள் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாக உதவிப் பொறுப்பாளர் பாலன் குறிப்பிட்டார்.

யாழ் மாவட்ட உள்ளூராட்சி திணைக்களமும், யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடாத்திக் கொண்டிருக்கும் ஈழத்து நூல், ஓவியம், சிற்பம், சித்தமருத்துவம் கண்காட்சி வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கண்காட்சி யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

அவர் மேலும் பேசியதாவது; பொருளாதாரத் தடைகளால் ஆங்கில மருந்துக்கும் தட்டுப்பாடு. எதற்கும் வெளிநாட்டை நம்பாது நாம் சொந்தக்காலில் நிற்பதற்கு சித்தமருத்துவம் மூலம் பிணிகளை அகற்ற வேண்டும். இதேபோல் எல்லாத் துறைகளிலும் உலகெங்கும் பரவியுள்ள எமது உன்னத போராட்டம் போன்று பல துறைகளிலும் பிரகாசிக்க வேண்டும்" என்றார்.

கண்காட்சியை தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நாடாவை வெட்டி ஆரம்பித்துவைத்தார்.

விழாவில் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழக உதவிப் பொறுப்பாளர் சேரலாதன், மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கினார்கள். —சு-ரி

## லலித் கொலையாளி 1990ல் மரண மடைந்தவராம்?

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் கொலையில் சம்பந்தப்பட்டவர் என அரசினால் ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்ட அப்பையா பாலகிருஷ்ணன் என்பவர் 1990ம் ஆண்டில் காலமானவர் என 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர் எனவும் 1990ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ந் திகதி மாங்குளத்தில் இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்து யாழ்' ஆஸ்பத்திரியில் காலமானவர் எனவும் 'ராவய' மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளையில் பாதுகாப்பு படையினர் புலிகளின் குரல் வானொலியைக் கிரமமாகக் கேட்டு அதனைத் தொகுத்து வைத்திருப்பதாகவும் அப்பையா பாலகிருஷ்ணனின் பெயர் மற்றும் விபரங்கள் அந்தத் தொகுப்புகளிலிருந்து கிடைத்துள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

## அவசரகாலச்சட்டம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தை விலக்கிக்கொள்ள அரசு முன்வந்துள்ளது.

இதேவேளை யூன் 18-ம் நாள் பாரிஸ் நகரில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் சம்பந்தமான கூட்டம் நடைபெறுவதால் இந்த நாடுகளைக் கவரும் வண்ணத்தில் அரசாங்கம் மேற்கண்ட முடிவை எடுத்திருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். —சு-ரீ

## பிரேமா கொலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருப்பதால் பிரேமதாஸா கொலை வழக்கில் தமிழக காவல்துறை உதவிகரமாக இருக்கும் என்று இலங்கை உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அமரசேன ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என்று இந்திய வானொலி தெரிவித்தது. (நி)

## 91/92 கல்வியாண்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய வெட்டுப்புள்ளிகளை பல்கலைக்கழக மானியஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி பொறியியல் I (மொறட்டுவ பல்கலைக்கழகம்)-280, பொறியியல்-I (பேராதனை பல்கலைக்கழகம்)-275, பொறியியல்-II (மொறட்டுவ பல்கலைக்கழகம்)-265, புதிய மாணவர்களின் பெயர் விபரப்பட்டியல் மேற்படி பல்கலைக்கழகங்களின் அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது.

மேற்படி இரு பல்கலைக்கழகங்களுக்கும் தெரிவான பொறியியல் மாணவர்களுக்கான புதிய வகுப்புகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

இதேவேளை வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் பொறியியல் பீடத்திற்கு மேலதிகமாக 100 மாணவர்களும், வர்த்தகமும், முகாமைத்துவ பீடத்திற்கும்மேலதிகமாக 300 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி-நி)

## கண்காட்சி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்லையா. எஸ். வரதன் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். இக்கருத்தரங்கு காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்குஆரம்பமாகவுள்ள கருத்தரங்கில் கலாநிதி சபா, ஜெயராஜா தலைமை வகிக்கின்றார். "1979க்குப்பின் ஈழத்து இலக்கிய வளர்ச்சி" என்ற தலைப்பில் பல அறிஞர்கள் உரையாற்றுவர். (சு-நி)

## பிரேமா போரையும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

புரொன்ட்லைன் சஞ்சிகை ஆசிரியர் என். ராமுக்கு வழங்கிய பேட்டியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்;

இந்திய அமைதிப்படையை இங்கு அழைப்பதற்கு நான் எடுத்த முடிவு குறித்து நான் கவலைப்படவில்லை, அந்த முடிவானது நான் நன்றாக சிந்தித்து எடுத்த ஒரு முடிவாகும்.

இந்திய அமைதிப்படையை இந்தியாவுக்கு திரும்பிப்போகுமாறு திரு. பிரேமதாசா அறிவித்ததையடுத்து அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரத்ன என்னைக்காண தனியே வந்தார்.

அவர் ஏன் இப்படிக் கூறினார்? என்னைக்கூட கேட்காமல் ஏன் அவர் இப்படிச் செய்தார்? என்று கேட்டார் பின்னர் நாடாளுமன்றத்திலும் அவர் இது குறித்து பிரஸ்தாபித்திருக்கிறார்.

பிரேமதாசா எடுத்த முடிவு ஒரு அரசியல் தீர்வாக இருக்கலாம் எனினும் அரசியலையும் போரையும் ஒன்றாக இணைத்துக் கொள்வது தவறாகும்.

அரசியல் ஆயுதமற்ற ஒரு போராட்டம். வன்முறை ஆயுதங்களுடன் கூடிய ஒரு நடவடிக்கை.

அரசியல் அதிகாரத்தில் தோல்வியுற்றால் எதிர்க்கட்சித் தலைவராக வரமுடியும். ஆனால் வன்முறைப் போட்டியில் தோல்வியுற்றால் நீங்கள் நிலத்துக்குக்கீழ்தான் போக வேண்டும். எங்களில் அநேகருக்கு அதுதான் நடந்தது. ஜனாதிபதி பிரேமதாசாவிற்கும் அது தான் நடந்தது.

எப்பொழுதும் அரசியலையும் போரையும் ஒன்றாக இணைத்து சிக்கலாக்குவது நல்லதல்ல என்றும் திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனா மேலும் தெரிவித்துள்ளார். (இ-நி)

## இன்று

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை ஸ்ரீமூத்தநயினார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று 5ந் திகதி சனிக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 15 தினங்கள் தொடர்ந்து நடைபெறும் இவ்வைபவத்தில் இம்மாதம் 18ந் திகதி ரதோற்சவமும் 19ந் திகதி தீர்த்த உற்சவமும் 20ந் திகதி திருக்கல்யாண விழாவும்இடம் பெறும் (71-கி)

0 0 0

(மானிப்பாய்)

அரியாலை அமரகலா சனசமூக நிலையத்தின் 44வது ஆண்டு நிறைவுவிழா இன்று 5ந் திகதி சனிக்கிழமை மாலை நிலைய திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது. (71-கி)

0 0 0

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களின் ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டியின் இன்றைய ஆட்டங்களின் விபரம்:

சென். நீக்கிலாஸ் கழகத்தை எதிர்த்து யங்ஹீரோஸ் கழகமும், சென். மேரிஸ் கழகத்தை எதிர்த்து ஸ்ரீ முருகன் கழகமும் மோதும். (வி)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகராட்சி மன்ற நகர்ப்புற சுகாதாரத் தொண்டர்களின் எழுச்சி விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று 5-ந் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும்.

## விஜயதுங்கா

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

போர் என இரு பிரிவுகளையும் உள்ளடக்கிய அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அநுரா பிரிவும், சந்திரிகா பிரிவும் தற்போது மும்முரமாக ஈடுபட்டுள்ளதாம். (இ)

## காமினி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக நாடாளுமன்றத்தில் கடந்த வருடம் கொண்டு வரப்பட்ட அரசியல் குற்றவியல் பிரேரணையில் கைச்சாத்திட்ட ஐக்கியதேசியக் கட்சி எம். பிக்களும் மீண்டும் கட்சியில் சேர்த்துக்கொள்ளப் படவுள்ளனர்.

சம்பந்தப்பட்ட பிரேரணையில் இவர்கள் கைச்சாத்திட்டதால் ஐக்கியதேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டது தெரிந்ததே.

நிபந்தனைகள் எதுவும் இல்லாது இவர்கள் மீண்டும் கட்சியில் சேர்த்துக்கொள்ளப்படவிருப்பதாகவும் கூறப்படுகிறது —இ-நி

## ரூபவாஹினி இயக்குநர் நாயகம்

(கொழும்பு)

ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தின் புதிய இயக்குநர் நாயகமாக சுனில் சரத் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் லங்கா சமசமாஜக் கட்சியின் மத்திய குழுவின் முன்னாள் உறுப்பினரும் காலஞ்சென்ற அமைச்சர் விக்டர் பெரேராவின் செயலாளரும் ஆவார். (இ)

## ஜனாதிபதி ஆட்சி

(1ம்பக்கத் தொடர்ச்சி)

வது!

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாழிப்பதற்கு தனி நபர் ஒருவர் மூலம் முடிவு எடுக்க முடியாது.

இதுசம்பந்தமாக இறுதி முடிவை எடுப்பதற்கு முன் ஐக்கியதேசியக் கட்சியுடனும் அதனுடன் இணைந்த ஏனைய அரசியல் கட்சிகளுடன் கலந்து பேசி அவற்றின் அனுமதியைப் பெறவேண்டும்.

எது எப்படியிருப்பினும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்று கொண்டு வரப்படும் பட்சத்தில் அதற்கு எதிராகவே நான் செயல்படுவேன்.

நாடாளுமன்ற ஆட்சிமுறை காரணமாகவே நாட்டில் இனப்பிரச்னை உக்கிரமடைந்த நாடு இரண்டாகப் பிளவுபடும் நிலை இன்று உருவாகியுள்ளது

ஜனாதிபதி ஆட்சிமுறை வந்த பின் சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகள் பெருமளவில் அரசின் கவனத்தை ஈர்த்துள்ளதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## வருட இறுதிக்குள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரப்படும். நாடாளுமன்றத்தில் இதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்கும் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

அரசியலமைப்புக்கு திருத்தம் கொண்டுவரப்பட்டபின் நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது.

இதன்காரணமாக தற்போதுள்ள அமைச்சர்களின் பதவிகளில் எந்தவித மாற்றங்களையும் செய்வதில்லையெனவும் அரசு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் ராஜாங்க அமைச்சர்களின் பதவிகளில் மாற்றங்கள் எதிர்வரும் வாரங்களில் மேற்கொள்ளப்படலாம் என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நி-இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூன் மாதம் 05-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B